**Date – 12.06.2025**
**MCOP – 133/2023**
**PW 1– முருகேசன்**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்தானது ஒசூர் இருந்து பாகலூரில் நோக்கி செல்லும் போது நல்லூர் சோதனை சாவடி அருகே ஏற்பட்டது. நான் ஹீரோண்டா இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டு இருந்தேன். அப்போது பின்னால் இருந்து வந்த எமகா FZ இருசக்கர வாகனம் மோதியது. மேற்படி வாகனம் ஒலி ஏழுப்பி முறையான சிக்னல் போட்டு வந்தது என்றும், நான் தான் எந்த வித சிக்னலும் இல்லாமல் வாகனத்தை திருப்பி விபத்து ஏற்பட காரணமாக இருந்தேன் என்றால் சரியல்ல. விபத்தானது என்னுடைய ஆஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் இருந்தது. ஆனால் தொலைந்து விட்டது. நான் திருப்பத்தூரில் உரிமம் வாங்கினேன். என்னிடம் ஓட்டு உரிமம் இல்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் Helmet அணிந்து சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தில் காப்பீடு உள்ளதா என்றால் இருந்தது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வாகனத்திற்கு காப்பீடும், பதிவு ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. விபத்தானது இரவு 7.00 மணிக்கு நடந்தது என்றால் சரியல்ல. என் மனைவி தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் விபத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக வேண்டி என் மனைவி தவறாக புகார் கொடுத்துள்ளார்

என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் வந்தது. சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. எனக்கு ஏற்பட்டுள்ள காயம் சாதாரண காயம் என்றும், கொடுங்காயம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் இல்லை என்றால் சரியல்ல. நான் செக்யூரிட்டியாக வேலை பார்த்து வந்தேன். மாதம் சம்பளத்திற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூடுதல் நஷ்ட ஈடு பெற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தொலைந்து விட்டது. நான் ரூ.1,28,061/- க்கு பில் தாக்கல் செய்து, நான் ரூ.1,24,353/- ரூபாய் தான் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. மீதி ரூ.3,708/- ம் பணம் அனுப்பியுள்ள மருந்தை திரும்ப கொடுத்து தள்ளுபடி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றும், அவற்றை மருத்துவர் மூலம் தான் நிரூபிக்க வேண்டி தான் தயாராக உள்ளேன். விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. வண்டி உரிமையாளர் மீது தான் இழப்பீடு கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Sd/P.Shunmugaraj, M.L.,
Principal Subordinate Judge,
Hosur.